# கலைஞரும் நானும்

78

"தமிழால் உயர்ந்தவர்கள் பலர். தனது உழைப்பால் தமிழை உயர்த்தியவர் டாக்டர் கலைஞர். அவரைப் பற்றிப் பேசும் ஒவ்வொரு வார்த்தையும், அன்னைத் தமிழுக்கு நாம் சூட்டும் ஆபரணங்கள்" என தனது நினைவுகளைப் பகிர்கிறார் திரைப்படத் தயாரிப்பாளர் **சித்ரா லட்சுமணன்.**



# "வாழ்த்துத் தந்தி அனுப்பிய ராஜகுரு!"

**சித்ரா லட்சுமணன்,** தயாரிப்பாளர் மற்றும் நடிகர்

"சில தலைவர்களை, பிரபலங்களைச் சந்திக்கும்போது பிரமாதமான வரவேற்பு கிடைக்கும். ஆனால், சந்திப்பதற்கு நேரம் வாங்குவது அவ்வளவு சாதாரணமாக நடக்காது. அந்த அனுபவங்களுடன் ஒப்பிடுகையில், டாக்டர் கலைஞரின் பண்பு வியப்பளிக்கக் கூடியது. மிகப் பெரிய ஆளுமையாக, முதலமைச்சராகப் பல பணிகள் இருக்கும். அதேநேரத்தில், அவரை அணுகுவது மிக எளிதாக இருந்தது. அதுவும், திரைத்துறையினர் என்றால் 'ஃப்ரீ பாஸ்' போல உடனே அனுமதி கிடைக்கும். அந்த வகையில், திரைத்துறை சார்ந்த கோரிக்கைகளுக்காகப் பலமுறை டாக்டர் கலைஞரைச் சந்தித்த அனுபவங்கள் உள்ளன.

## சாக்பீஸ் வாசகங்கள்

1965-ஆம் ஆண்டு வாக்கில், தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், மிகப் பெரிய வீச்சாக இருந்த நேரத்தில், நான் வேலூரில் பள்ளி மாணவனாக இருந்தேன். தி.மு.க சார்பில், அடிக்கடி கூட்டங்கள் நடக்கும். மாணவர்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வார்கள். அப்போது அந்தக் கூட்டங்களில் நானும் கலந்து கொண்டிருக்கிறேன். அந்த வகையில், வேலூரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில்தான் முதன்முறையாக கலைஞர் அவர்களைப் பார்த்தேன்.

பள்ளிப் படிப்புக்குப் பின், சென்னைக்கு வந்த போது, 1967-ஆம் ஆண்டு தேர்தல் நேரம். மேற்கு மாம்பலம் சாலைகளில் சாக்பீசால் 'உங்கள் ஓட்டு தி.மு.க.வுக்கே' என எழுதிய நாட்களும் உண்டு. அந்த அளவுக்கு அனுதாபியாக, தி.மு.க முன்னோடிகளின் எழுத்துகள், பேச்சுகள் ஈர்த்திருந்தன.

## தொண்டர்களிடம் நெருக்கம்

1971-ஆம் ஆண்டில், நான் **'இந்தியன் மூவி ஸ்டார்'** என்கிற பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அந்தப் பத்திரிகையின் அலுவலகம், தி.மு. கழக முன்னோடி கே.ஏ.மதியழகன் அவர்களின் வீட்டு மாடியில்தான் இயங்கியது. அதனால், தி.மு.கழகத்தினரை அவ்வப்போது பார்ப்போம். ஆனால், கலைஞரைச் சந்திக்கும் வாய்ப்பு அமைந்ததில்லை.

அந்த ஆண்டில், கலைஞர் இரண்டாவது முறையாக முதலமைச்சராகத் தேர்தெடுக்கப் பட்டார். அவருக்கு வாழ்த்து சொல்வதற்காக நானும், பத்திரிகையின் உரிமையாளரும் சென்றிருந்தோம். அப்போது கலைஞரை நேரில் அருகில் சந்தித்தாலும், அவரோடு நின்று பேசும் அளவுக்கு நான் வளர்ந்திருக்கவில்லை. சூழலும் அப்படி இல்லை. தொண்டர்கள் கூட்டம் நெருக்கிக் கொண்டிருந்தது.

அப்படி வாழ்த்துச் சொன்னவர்களை, பெயர் சொல்லி நலம் விசாரிப்பதும், ஊரிலிருந்து வராதவர்களைப் பெயர் சொல்லிக் கேட்பதுமாக இருந்தார். அவ்வளவு கூட்டத்திலும், தனது தொண்டர்களை நினைவில் வைத்து, பெயர் சொல்லி அழைப்பது எனக்கு வியப்பளித்தது.

## தனிக்காட்சி தேவையில்லை

அதன் பின்னர், நான் திரைத்துறையில் இயக்குநர் பாரதிராஜா அவர்களிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்தேன். அவரது இயக்கத்தில் உருவான 'அலைகள் ஓய்வதில்லை' திரைப்படம் சமுதாயச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டது. அந்தப் படத்தை கலைஞருக்குத் தனியே திரையிட்டுக் காட்ட வேண்டும் என விரும்பிய பாரதிராஜா, அதற்காக கலைஞரை அழைப்பதற்காகச் சென்றபோது, அவருடன் நானும் சென்றிருந்தேன்.

படம் ஏற்கெனவே வெளிவந்து தியேட்டரில் ஓடிக் கொண்டிருப்பதால், 'எனக்காக தனிக் காட்சி ஏற்பாடு செய்ய வேண்டாம். நான் திரைப்படம் ஓடிக் கொண்டிருக்கிற திரையரங்கிலேயே பார்த்து விடுகிறேன்' என்றார் கலைஞர். நாங்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் தனிக்காட்சிக்கு ஒப்புக் கொள்ளவில்லை. அதன் பின்னர், அந்தப் படம் ஓடிக் கொண்டிருந்த ஈகா தியேட்டரில் கலைஞருக்குச் சிறப்பு இருக்கைகள் ஏற்பாடு செய்துவிட்டு, அவருக்குத் தகவல் அளித்தோம்.

இரவு 9.30 மணிக் காட்சி. கலைஞர் திரைப்படம் பார்க்க வந்தபோது, பாரதிராஜா, கதாசிரியர் கலைமணி, நான் மூவரும் வரவேற்று அழைத்துச் சென்றோம். அவர் அருகிலேயே, மூன்று மணி நேரம் அமர்ந்து ஒரு திரைப்படத்தைப் பார்க்கும் வாய்ப்பு அப்போது அமைந்தது. படத்தைப் பார்த்த கலைஞர், "படத்தின் உச்சக்கட்ட காட்சியில், ஒரு சமுதாயப் புரட்சியையே உருவாக்கி விட்டீர்கள்" என பாரதிராஜாவை வெகுவாகப் பாராட்டினார்.

## "நான் வந்துவிட்டால்..?"

அதேபோல, எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில், திரைத்துறையினர் சார்பில், நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு ஒரு பாராட்டு விழா எடுத்தோம். சிவாஜியின் கலைப் பயணத்தில் மிக முக்கியமான பங்கு கலைஞருக்கு உள்ளது என்பதால், அவரையும் விழாவுக்கு அழைப்பதற்காக, அழைப்பிதழுடன் கோபாலபுரம் சென்றோம். பாரதிராஜா, ஏவி.எம். சரவணன், மேஜர் சுந்தரராஜன் ஆகியோருடன் நானும் சென்றிருந்தேன்.

சிவாஜியின் கலைப்பயணம், அதில் கலைஞரின் பங்கு ஆகியவற்றை நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது, அழைப்பிதழைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்த கலைஞர், "இந்த விழாவுக்கு நான் வந்துவிட்டால், என்ன செய்வீர்கள்" என ஒரு கேள்வியைக் கேட்டார். எங்களால் பதில் சொல்ல முடியவில்லை. "இந்த விழாவில், நான் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக கொடுக்கப் படும் அழைப்பா இது? இல்லையே, ஒரு சம்பிரதாயத்துக்காக எனக்கு அழைப்புக் கொடுக்கிறீர்கள்" என்றார்.

அந்த நிலைமையைச் சமாளிக்க மேஜர் சுந்தரராஜன் ஏதேதோ சொல்லி சமாதானம் செய்கிறார். ஆனால், கலைஞரோ, "நான் வந்தால் உங்களுக்கும் சங்கடம்" என எங்களை இயல்பாக்கி அனுப்பினார். விழா நடக்கும் அன்று, 'விழா சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறேன்' என எங்கள் நான்கு பேர் பெயரிலும் தனித்தனியாக தந்தி அனுப்பி இருந்தார்.

## மனோரமா நிகழ்ச்சி

நான் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றியபோது, பலமுறை கலைஞரைச் சந்திக்கும் வாய்ப்புகள் அமைந்தன. ஆச்சி மனோரமா அவர்கள் 1,500 படங்கள் நடித்ததற்குத் திரைத்துறை சார்பில், பாராட்டு விழா ஏற்பாடு செய்தோம். கலைஞர் தலைமை தாங்க வேண்டும் என தேதி கேட்கச் சென்றபோது, அவரது உதவியாளர் சண்முகநாதன் அவர்களை அழைத்து, அவர் கலந்துகொள்ள இருந்த நிகழ்ச்சிகளின் விவரங்களைப் பார்த்துவிட்டு தேதி ஒதுக்கினார். நிகழ்ச்சிக்கான அழைப்பிதழ் கொடுக்கச் சென்றபோது, மனோரமா அவர்களிடம் பழைய திரைத்துறைச் சம்பவங்களை நினைவூட்டிப் பேசினார். அந்தச் சந்திப்புகள் அவ்வளவு இயல்பாக இருந்தன.

திரைத்துறை சார்ந்த எந்தக் கோரிக்கை என்றாலும், உடனே நிறைவேற்றிவிடுவார். நான் நடித்த 'பாஸ் என்கிற பாஸ்கரன்' படத்துக்கு வரிவிலக்குக் கிடைக்காது என்கிற சூழலில், தயாரிப்பாளர், நடிகர் ஆர்யா உள்ளிட்டோர் கலைஞரைச் சந்தித்து விளக்கம் அளித்துள்ளனர். 'பாஸ் என்பது ஆங்கிலச் சொல் அல்ல, பாஸ்கரன் என்பதன் சுருக்கம் தான்' எனக் கூறி இருக்கின்றனர். அதன் பின்னர் அடுத்த சிலமணி நேரங்களில், வரிவிலக்கு தொடர்பான சிக்கல்கள் தீர்க்கப்பட்டன.

**கலை உலகின் மீதும், திரைப்படக் கலைஞர்கள் மீதும் தன் வாழ்நாள் முழுவதும் அன்பு கொண்டிருந்த அந்த ராஜகுரு, எந்நாளும் நினைவில் இருந்து நீங்கமாட்டார்.**

சமீபத்தில், எனது நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, தற்போதைய முதலமைச்சரின் முதிர்ச்சியான அரசியல் பண்புகள் குறித்துப் பேச்சு வந்தது. 'அவருக்குப் பின்னால், யாரோ ஒரு ராஜகுரு இருக்கிறார்' என நண்பர் குறிப்பிட்டார். நான் சொன்னேன், 'யாரோ ஒரு ராஜகுரு அல்ல. கலைஞர் என்கிற ராஜகுரு!' என்றேன். கலை உலகின் மீதும், திரைப்படக் கலைஞர்கள் மீதும் தன் வாழ்நாள் முழுவதும் அன்பு கொண்டிருந்த அந்த ராஜகுரு, எந்நாளும் நினைவில் இருந்து நீங்கமாட்டார்.

....பகிர்வார்கள்

## குஜராத் மாடல் என்கிற போலி பிம்பம்!

குஜராத் மாநிலத்தை, இந்தியாவின் சொர்க்க பூமியென பா.ஜ.க. தொடர்ந்து சொல்லி வருகிறது. 2014-இல் நரேந்திர மோடி பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டபோது, 'குஜராத் மாடல்' என்ற முழக்கமும் முன்வைக்கப்பட்டது. அதற்காகவே பொய்யான 'போட்டோஷாப்' பிம்பங்களும் பா.ஜ.க.வினரால் பரப்பப்பட்டன. ஆனால், உண்மையிலேயே குஜராத், வளர்ச்சியில் பின்தங்கிய மாநிலம் என்பதைப் பல புள்ளிவிவரங்கள் நிரூபித்துள்ளன. இந்தியாவிலேயே, ஊட்டச்சத்துப் பற்றாக்குறையால் குழந்தைகள் அவதிப்படுவது, அதிகமான வாடகைத்தாய்கள் நிறைந்திருப்பது ஆகியவற்றில், குஜராத் மாநிலம்தான் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. 2014-ஆம் ஆண்டுக்குப் பிறகு குஜராத் குறித்து, பா.ஜ.க.வினர் முன்வைத்த பல பொய் பிம்பங்களும் சமூகவலைத்தளங்களில் சுக்குநூறாகிவிட்டன.

மோடியின் பத்தாண்டு ஆட்சிக்காலம்தான் இந்தியாவில் வேலைவாய்ப்பின்மை அதிகம் நிலவிய காலம். தான் ஆட்சிக்கு வந்தால், 2 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக மோடி அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. பல ஆண்டுக்காலம் மோடி முதல்வராக இருந்த குஜராத்தே வேலைவாய்ப்பின்மையில்தான் சிக்கித் தவிக்கிறது. இந்நிலையில், சில நாட்களுக்கு முன்பு, குஜராத் மாநிலம் அங்கலேஷ்வரில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தின் 5 காலியிடங்களுக்கு நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வில் ஆயிரம் பேர் கியூவில் நின்று தள்ளுமுள்ளு ஏற்பட்ட காணொலி சமூகவலைத்தளங்களிலும் தொலைக்காட்சியிலும் பரபரப்பாகப் பேசப்பட்டது.

இப்போது 'குஜராத் மதுவிலக்கு பூமி' என்ற பிம்பமும் உடைந்திருக்கிறது. குஜராத் மாநிலம், அகமதாபாத்தில் காவல்துறை வாகனத்திலேயே ஓர் இளைஞர் மதுப்புட்டியை முத்தமிட்டு, பின் மது அருந்துகிறார். எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களிலெல்லாம் அவதூறுகளையும் குற்றச்சாட்டுகளையும் முன்வைக்கும் பா.ஜ.க.வினர் இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள்?

## :.ப்ளாஷ்பேக்





கே.சந்திரசேகரன்

### சிவாஜிக்கு சிலை!

2006-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில், நடிகர் திலகம் சிவாஜிக்கு சிலை, மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்ததற்கு நன்றி தெரிவிப்பதற்காக, சிவாஜிப் பேரவை நிர்வாகிகளுடன் அண்ணா அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்தேன். அப்போது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் உடன் இருந்தார். கலைஞர் அவர்களிடம் நன்றி தெரிவித்தபோது, "கலைஞர் கருவூலத்தில், கழகத்தை வளர்த்தவர்கள் பட்டியலில், சிவாஜி கணேசன் புகைப்படத்தை வைத்திருக்கிறேன். சிவாஜிக்கு நான் செய்யாமல் வேறு யாருய்யா செய்யப் போகிறார்கள்" என்று சிரித்துக்கொண்டே என்னிடம் கேட்டார். சொன்னது போலவே, ஆட்சிக்கு வந்து முதல் சட்டசபைக் கூட்டத்தொடரிலேயே நடிகர் திலகம் சிவாஜிக்கு சிலை அமைக்கப்படும் என்று அறிவித்து, சென்னை கடற்கரை காமராஜர் சாலையில், சிலை அமைத்துப் பெருமை சேர்த்ததை என்றென்றும் மறக்க முடியாது.

**– கே.சந்திரசேகரன், தலைவர்,**
**நடிகர் திலகம் சிவாஜி சமூக நலப்பேரவை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### ஆக்கப்பணியாக இருக்க வேண்டும்!

1957-ஆம் ஆண்டு, தேர்தலில் போட்டியிட்டு 15-இடங்களில் தி.மு.க வெற்றிபெற்றிருந்தது. 1958-ஆம் ஆண்டு ஜூலைக்குள், திருவாடானை, தூத்துக்குடி என இரண்டு இடைத்தேர்தலைச் சந்தித்து தோல்வியைத் தழுவியது. "ஆர்வம் வீணாகிவிடக்கூடாது. ஆக்கப்பணியாக அமைய வேண்டும்" என, 'நம்நாடு' இதழில் எழுதினார், பேரறிஞர் அண்ணா. மேலும் "தேர்தல் மட்டுமே நமக்கு குறிக்கோளில்லை என்றாலும், பொதுத்தேர்தல்களில் போட்டியிடும் அளவுக்கு சக்தி பெற்று வருகிறோம்" என எழுதினார் அண்ணா.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

538

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131